<u>**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்**</u>

<u>**ஸ்ரீவில்லிபுத்தூர்**</u>

**MCOP.No:179/2023** **நாள் 08.06.2026**

**எ.ம.சா.4, திரு.C.வைரமுத்து**

**எ.மா.சா.4 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

விபத்தில் இறந்துபோன ராஜ்குமார் என்பவர் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான பேருந்தில் பயண சீட்டை எடுத்து பயணம் செய்தவர் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனமானது 2ம் எதிர்மனுதாரரான எங்களது காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் அலுவலக கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். என்னிடம் காட்டப்படும் மசாஆ.1முதல் தகவல் அறிக்கையில் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகன ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் முன்னால் சென்ற வாகனத்தை சைடு வாங்கி ஓட்டி செல்லும் போது தான் 1ம் எதிர்மனுதாரரின் பேருந்தில் பயணம் செய்த ராஜ்குமார் என்பவர் பஸ்ஸின் பின்பக்க படிக்கட்டில் இருந்து கீழே விழுந்ததாகவும் விபத்து ஏற்பட்டதாகவும் சொல்லியுள்ளது என்று சொன்னால் சரிதான். எங்களது காப்பீடு நிறுவன புலன்ஆய்வு அதிகாரி எங்களிடம் அறிக்கையை கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் குற்ற எண்.25/2023 கிருஷ்ணன்கோவில் காவல் நிலைய காவல் துறை அதிகாரிகள் தயார் செய்த மாதிரி வரைபடம் என்று சொன்னால் அது சரிதான். இந்த விபத்தானது வளைவான சாலை பகுதியில் நடந்ததாக மாதிரி வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் மசாஆ.9 பிரேத பகுப்பாய்வு அறிக்கை என்றால் சரிதான். அவருடைய உடல் உள்ளுறுப்புகளை பகுப்பாய்வு செய்ததில் எந்தவிதமான நச்சுபொருளோ, எத்தில் ஆல்கஹாலோ விபத்து சமயத்தில் உட்கொள்ளவில்லை என்று கண்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபரங்கள் அனைத்தும் எங்களுக்கு தெரிந்திருந்தோம் விபத்து சமயத்தில் ராஜ்குமார் பேருந்தின் பின்பக்க படிக்கட்டில் இருந்து குதித்துள்ளார் என்று நாங்கள் பொய்யாக சொல்கிறோம் என்றால் அப்படியில்லை. விபத்து நடந்த சாலையானது இருவழி சாலை என்றால் சரிதான். எ.ம.சாஆ.3 ஆக நாங்கள் குற்ற இறுதி அறிக்கையின் நீதிமன்ற சான்றிட்ட நகலை தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான். அதோடு இணைக்கப்பட்டிருந்த

சாட்சிகளின் குவிமுச.பிரிவு 161(3)ன் கீழான வாக்குமூலம் , விபத்து சம்மந்தப்பட்ட இடத்தின் மாதிரி வரைபடம், தடய பகுப்பாய்வு அறிக்கை ஆகியவற்றை முழுமையாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் எமசாஆ.3 ல் ஒரு பகுதியாவே தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் எனவே எமசாஆ.3 ஆவணத்தை முழுமையான ஆவணம் அல்ல என்பதால் அதை ஏற்கும்படியாக இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. மசாஆ.9 ஆவணத்தில் இறந்துபோன ராஜ்குமார் விபத்து சமயத்தில் மது அருந்தவில்லை என்பதை பொறுத்து காவல் துறையினர் சரியாக புலன்விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. எமசாஆ.3 ஆவணத்தினை பொறுத்து சாட்சியம் அளித்துக்கொள்ள எங்கள் தரப்பில் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் இருப்பதில் இருந்தே எமசாஆ.3 ஆவணம் எங்களுக்கு ஆதரவாக இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. எமசாஆ.1 மற்றும் எமசாஆ.3 ல் RCS.36/2025 ஸ்ரீவில்லிபுத்தூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2 ல் புகார்தாரர் தரப்பில் ஆட்சேபணையை தாக்கல் செய்யப்பட்டு அது விசாரணையில் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் அது சரிதான். விபத்து சமயத்தில் 1ம் எதிர்னுதாரரின் வாகன ஓட்டுநர் அந்த இரண்டு வழி தட சாலையில் கிருஷ்ணன்கோவில் - வத்திராயிருப்பு சாலையில் வளைவான பகுதியில் அவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டி சென்று முன்னால் சென்ற வாகனத்தை சைடு வாங்குவதற்காக சென்ற போது வலதுபக்கம் ஏறி எதிர்திசையில் வத்திராயிருப்பு - ஸ்ரீவில்லிபுத்தூர் வழிதடத்தில் தாறுமாறாக ஓட்டி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்று சொன்னால் அது சரியல்ல. விபத்து சம்மந்தப்பட்ட குற்ற இறுதி அறிக்கை சம்மந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் எங்கள் நிறுவனத்திற்கு நன்கு தெரியும் என்றும் அதனை தாக்கல் செய்தால் விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகம், அஜாக்கிரதை, கவனக்குறைவால் ஏற்பட்டது என்பது' தெரிந்துவிடும் என்பதற்காக வேண்டி அதனை முழுமையாக நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அதுசரியல்ல. எமசாஆ.3 ஆவணத்தை பொறுத்து காவல் நிலைய புலன் ஆய்வு ஆய்வாளர் தான் முழுமையாக சாட்சியம் அளிக்க முடியும் என்று சொன்னால் அது சரிதான். நிரூபண அபிடவிட்டில் நாங்கள் சொல்லியது போல் விபத்தில் இறந்துபோன ராஜ்குமார் மது

எதுவும் அருந்தவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. சாட்சி மீண்டும் தானாக RCS.36/2025ல் இறந்துபோன ராஜ்குமார் விபத்து சமயத்தில் பஸ்டாப்பில் இறங்குவதற்கு பதிலாக குடிபோதையில் பஸ்ஸில் இருந்து பின்பக்க படிக்கட்டு வழியாக வெளியே குதித்துள்ளார் என்று சொல்லியுள்ளதாகவும் சாட்சியம் அளிக்கிறார். எமசாஆ.3 ஆவணமானது தவறுதலாக தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை என்று சொன்னால் அது சரியல்ல. விபத்தானது 1ம் எதிர்மானுதாரரின் பேருந்து ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதை, கவனக்குறைவு தான் காரணம் என்றும், விபத்து இழப்பீடு தொகையை 1, 2 எதிர்மனுதாரர்கள் தான் மனுதாரருக்கு செலுத்த கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் அது சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 08thday of June 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.